**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.1337/2019 பெயர் : ஜெயபிரகாஷ் நாள் : 23.06.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

2015-லிருந்து தற்போது வரையிலான வருமான வரி கணக்கை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளீர்களா என்றால், ஆடிட்டர் இல்லாததால், எடுத்து வர இயலவில்லை, அடுத்த வாய்தாவிற்கு கொண்டு வருகிறேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், என் வழக்கிற்கு எதிராக அமைந்துவிடும் என்பதால், நான் அதை நீதிமன்றத்திற்கு கொண்டு வரவில்லை என்றால், சரியல்ல. நான் வட்டிக்கு கடன் கொடுத்து வருகிறேன் என்றால், சரியல்ல. நீங்கள் வட்டி தொழில் செய்து வருவது வருமான வரி கணக்கில் தெரியும் என்பதால், மேற்படி கணக்கை நீதிமன்றத்திற்கு நீங்கள் எடுத்து வரவில்லை என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நீங்கள் படித்துப்பார்த்து, அதன் விபரங்களை தெரிந்து கொண்டீர்களா என்றால், தெரிந்து கொண்டேன். அதனை நீங்கள் மறுத்து பதில் தாக்கல்

செய்துள்ளீர்களா என்றால், இல்லை. உங்களுக்கு யார் மூலம் பிரதிவாதி பழக்கம் என்றால், எனது அப்பா காலத்திலிருந்து அவர் எனக்கு பழக்கம். அவர் தச்சு தொழில் செய்து வந்த வகையில் எனக்கு பழக்கம். மேற்படி விபரங்களை நீங்கள் பிராதில் கூறவில்லை என்றால், சரியல்ல, தெரிவித்துள்ளேன். எனக்கும், பிரதிவாதிக்கும் வட்டிக்கு கடன் கொடுத்த வகையில் மட்டுமே பழக்கம் என்றால், சரியல்ல, கைமாற்றாக தான் பணம் கொடுத்தேன், வட்டிக்கு கொடுக்கவில்லை. இதுபோல் 4, 5 முறை என்னிடம் பணம் வாங்கியிருப்பார். தாவா சொத்திற்கு எவ்வளவு கடன் கொடுத்தேன் என்றால், ரூ.2,50,000/-, மீண்டும் சாட்சி இடம் வாங்குவதற்காக ரூ.2,50,000/- கொடுத்தேன் என கூறுகிறார். நீங்கள் கடனுக்காக தான் வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தப்பத்திரம் எழுதி வாங்கியுள்ளீர்கள் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 (பட்டா) ஆவணத்தின் படி நீங்கள் கிரைய ஒப்பந்தம் போடமுடியாது என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள நிபந்தனைகளை நீங்கள் படித்துப் பார்த்தீர்களா என்றால், இல்லை, அவர் சொல்வதை வைத்து நான் பணம் கொடுத்தேன். எனக்கு உண்மையில் தாவா சொத்தை கிரையம் பெறும் எண்ணம் இருந்திருந்தால், வா.சா.ஆ.1-ல் உள்ள நிபந்தனைகளை படித்துப்பார்த்திருப்பேன் என்றாலும், பணத்திற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னாலும், சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய

ஒப்பந்த ஆவணம் எழுதுவதற்கு முன்பு வில்லங்க சான்று போட்டுப்பார்த்தேனா என்றால், இல்லை. அதேபோல் அரசு வழிக்காட்டி மதிப்பு சான்று பெற்று பார்த்தீர்களா என்றால், இல்லை. எப்போதும் அரசு வழிக்காட்டி மதிப்பை விட சந்தை மதிப்பு அதிகமாக இருக்கும் என்றால், சரிதான். கிரைய ஒப்பந்த ஆவணம் கடனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் தான், மேற்படி ஆவணத்தை நீங்கள் பரிசீலனை செய்யவில்லை என்றால், சரியல்ல, நம்பிக்கையின் அடிப்படையில் கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தேன். தாவா சொத்து எந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது என்றால், துய்யம்பூந்துறை ஊராட்சிக்கு கட்டுப்பட்டது. தாவா சொத்தில் கண்ட வீட்டில் தான் வாதி தற்போது வரை குடியிருந்து வருகிறார் என்றால், சரிதான். அந்த வீடு எந்த திசையில் அமைந்துள்ளது என்றால், எனக்கு தெரியாது. அதில் எத்தனை அறைகளை கொண்டுள்ளது என்றால், நான் உள்ளே சென்று பார்த்ததில்லை. அந்த வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் எழுப்பப்பட்டுள்ளதா என்றால், இல்லை. எத்தனை அடி நீளத்திற்கு, அகலத்திற்கு அந்த வீடு கட்டப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சொத்து விபரத்தில் தாவா சொத்து தார்ஸ் வீடா, ஓட்டு வீடா, அது எத்தனை சதுரடியில் அமைந்துள்ளது போன்ற விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. உண்மையில் கிரையத்திற்காக

தாவா கிரைய ஒப்பந்தம் எனக்கும், பிரதிவாதிக்கும் ஏற்பட்டிருந்தால், மேற்படி விபரங்களை கூறியிருப்பீர்கள் என்றாலும், கடனுக்காக தாவா கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதால், மேற்படி விபரங்களை சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால், சரியல்ல. மீதி கிரைய தொகை ரூ.50,000/- நீதிமன்றத்தில் தற்போது வரை நீங்கள் செலுத்தவில்லை என்றால், சரிதான். உண்மையில் கிரையத்தை பூர்த்தி செய்துக் கொள்ள நீங்கள் தயாராக இருந்திருந்தால், கிரைய பாக்கித் தொகையை நீங்கள் நீதிமன்றத்தில் செலுத்தியிருப்பீர்கள் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தில், நீங்கள் மொத்த கிரையத் தொகை ரூ.3 லட்சம் என அதில் ரூ.2,50,000 அதே தேதியில் நீங்கள் செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட நாளிலிருந்து கிரையத்தை பூர்த்தி செய்துக்கொள்ள 3 ஆண்டுகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். உண்மையில் கிரையம் பெறுவதாக இருந்திருந்தால், பாக்கி கிரைய தொகையை செலுத்துவதற்காக 3 ஆண்டு காலக்கெடு நிர்ணயம் செய்திருக்க மாட்டீர்கள் என்றால், பிரதிவாதி வேறு வீடு பார்த்து செல்ல வேண்டும் என்று கூறியதால், 3 ஆண்டு காலக்கெடு நிர்ணம் செய்யப்பட்டது. மேற்படி சங்கதி வழக்கறிஞர் அறிவிப்பிலும், தாவாவிலும், கிரைய ஒப்பந்தத்திலும் குறிப்பிடப்

படவில்லை என்றால், சரிதான். பிரதிவாதிக்கு கொடுத்த கடனுக்காக கிரைய ஒப்பந்தப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டதால்தான், மேற்படி சங்கதிகளை நீங்கள் கூறவில்லை என்றால், சரியல்ல. கிரைய ஒப்பந்தப்பத்திரம் முத்திரைத்தாள் வாங்கிய தேதியிலேயே பதிவு செய்யப்படவில்லை என்றால், சரிதான்.

கிரைய ஒப்பந்தப் பத்திரம் யாரால் எழுதப்பட்டது அல்லது தட்டச்சு செய்யப்பட்டது போன்ற விபரம் கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. 2017-ம் வருடம் பிரதிவாதி உங்களிடம் 2,00,000/- வட்டிக்கு கடன் பெற்றதற்கு நீங்கள் அந்த கடனுக்கு ஆதரவாக நீங்கள் கேட்டுக்கொண்டதன் படி வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தமானது ஏற்படுத்தப்பட்டது, தாவா சொத்தை கிரையம் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. வாதி குடியிருக்கும் வீட்டை விற்பதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதி எப்போது தாவா சொத்தை 3-ம் நபர்களுக்கு விற்க முயற்சி செய்தார் என்ற விபரம் தாவாவில் சொல்லவில்லை என்றால், சரிதான். 2019-ம் வருடம் வரை வாதி அசல் தொகை ரூ.25,000/-ம், வட்டியும் செலுத்தி வந்தார் என்றால், அது பொய், தொகை முழுமையாக வரவேண்டும். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தப்பத்திரம் நிபமானது, அது

நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை நீங்கள் தவறான முறையில் அடைய வேண்டும் என்பதற்காக இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னாலும், சரியல்ல. நீங்கள் தாவாவில் கோரியுள்ள ஏற்றவை ஆற்றுதல் பரிகாரம், மாற்று பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல.